பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 11 வெள்ளிக்கிழமை 26.09.2025 கதிர் 320

**இது ரகசியம் அல்ல!**

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்துவரும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80ஆவது அமர்வில் அரசுத் தலைவர் அநுரகுமார தனது கன்னியுரையை ஆற்றியுள்ளார். ☞2

# அநுர ஒரு சந்தர்ப்பவாதி அவர் தீர்வை தரமாட்டார்

## சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்படவேண்டும் – சிறீதுங்க ஜயசூரிய




அரசுத் தலைவர் அநுரகுமார ஒரு சந்தர்ப்பவாதி. அவர் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைத் தரமாட்டார்.

சுயநிர்ணய அடிப்படையில் தமிழ்மக்களுக்குத்தீர்வைத் தரஆளும்தரப்புநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய சோசலிக்கட்சியின்தலைவர் சிறீதுங்க ஜயசூரிய.

யாழ்ப்பாணத்திற்குநேற்று வருகை தந்திருந்த அவர் இங்கு செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுர குமாரவின் ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஒரு வருடாமாகிவிட்டது. இந்தக் காலப் பகுதியில் அவர்கள் செய்தது என்ன? அமெரிக்காவின் திட்டத்திற்கு ஏற்பவே அநுர செயற்படுகின்றார். அவரது ஆளும்தரப்பும் முன்னைய ஆளும்தரப்புக்களுக்குநிகரானதுதான். தேர்தல் மேடைகளில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைநிறைவேற்றாது மக்களைத் திசை திருப்பி தங்களின் ஆட்சியைப் பாதுகாக்கவே முனைகின்றது, பாடுபடுகின்றது.

அநுர ஒரு சந்தர்ப்பவாதி. அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலில் இருந்து நாட்டைச் சீரிக்கும் ஒருவர். அமெரிக்கா என்ன நினைக்கின்றதோ அதையே நாட்டில் முன்னெடுத்து வருகின்றார். சர்வதேச நாணய ☞2

## வடக்கு கிழக்கில் வருமானம் குறைந்த உள்ளாட்சிமன்ற வருவாயை அதிகரிக்க உதவி தேவை

**ஹிஸ்புல்லா எம்.பி. கோரிக்கை**

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வருமானம் இல்லாத சில உள்ளூராட்சி சபைகள் தங்களின் ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்க முடியாமல் கஷ்டப்படுகின்றன. அவ்வாறான சபைகளின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளத் தேவையான உதவிகளை ஆளும்தரப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் ☞6

## சபாநாயகருக்கு எதிராக விரைவில் நம்பிக்கையில்லா தீர்மான வரைவு

**ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு**

பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதில் எவ்வித சட்ட சிக்கலுமில்லை என்று சட்டமா அதிபர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர்சபை அறிக்கை அளித்துள்ள நிலையில் முறையற்ற வகையில் நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகர் புறக்கணித்துள்ளார். சபாநாயகர் நாடாளுமன்ற நிலையியல் கட்டளையை மீறுவதும், முறையற்ற வகையில் செயற்படுவதும் பாரதூரமான குற்றமாகும். சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபாநாயகர் ☞6

## ஈரானிலிருந்து போதைப்பொருள் கொள்கலன் வந்தது தெரிந்தும் ஏன் நடவடிக்கை இல்லை?

**நாமல் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் கேள்வி**

ஈரான் நாட்டின் தலைநகரான தெஹ்ரானில் இருந்து இரண்டு கொள்கலன்கள் ஊடாக போதைப்பொருள் தொகை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று சர்வதேச புலனாய்வு பிரிவு அறிவித்தும் பாதுகாப்பு தரப்பினர் ஏன் உரியநடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எம் மீது பழியை சுமத்தி போதைப்பொருள் ☞6

## பதில் பாதுகாப்பு அமைச்சர் அருணவுக்கு எதிரான பிரேரணையை ஏற்கமுடியாது


**சபாநாயகர் நேற்று மீண்டும் அறிவிப்பு**

அரசமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் நாடாளுமன்ற சம்பிரதாயங்களை அடிப்படையாகக்கொண்டு பாதுகாப்பு பிரதி அமைச்சர் (பதில் பாதுகாப்பு அமைச்சர்) அருண ஜயசேகரவுக்கு எதிரான ☞2

## முல்லைத்தீவு இளைஞர்கள் நான்கு பேர் லொறி – வான் விபத்தில் பரிதாபச் சாவு




அநுராதபுரத்தில் நேற்று அதிகாலை

பாரவூர்தியும் (லொறி) சிற்றூர்தியும் ☞6

## இரு அறிக்கைகளையும் சபைக்கு அளிக்கை செய்தார் சபாநாயகர்

எதிர்க்கட்சியினரின் தொடர்ச்சியான வற்புறுத்தலைத் தொடர்ந்து, பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அலுவலகம் ஆகியன வழங்கிய அறிக்கைகளை சபாநாயகர் நேற்றுச் சபைக்கு அளிக்கை செய்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக, நாங்கள் முன்வைத்த நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் நீங்கள் (சபாநாயகர்) இரண்டாவது தடவையாகவும் சபைக்கு அறிவித்துள்ளீர்கள்.

அளிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை முதன்முறையாக நிராகரிக்கப்பட் ☞2

## இனி இது .....

அந்த உரையில அவர் புதிய அரசமைப்புக் குறித்தோ, தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு குறித்தோ அவரது உரையில் ஒரு வரி அல்லது ஒரு சொல்கூட இல்லை.

'ஊழல் இல்லாத நெறிமுறையான ஆட்சி, வறுமை ஒழிப்பு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தூய்மையான நாடு ஆகிய முக்கிய துறைகளில் எங்கள் கவனத்தை செலுத்தியுள்ளோம். அதனுடன் இணைந்ததாக , கல்வி மற்றும் சுகாதாரம் குறித்து நாங்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். அவை அனைத்தையும் படிப்படியாக வென்று வருகிறோம்' இதுதான் அநுரவின் உரையில் உள்ள முக்கிய விடயம். அரசியல் தீர்வு குறித்தோ புதிய அரசமைப்புக் குறித்தோ அவரது உரையில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படுவதில்லை.

ஐ.நா. அரங்கில் தீர்வு குறித்து சிங்களத் தலைவர்கள் வாக்குறுதிகளை வழங்குவதும் அதை நிறைவேற்றாமல் பின்னர் ஓடி ஒளிவதும் ஒன்றும் புதிதில்லை. காலங்காலமாக நடந்து வருவதுதான். ஐ.நா. வாக்குறுதியளித்துவிட்டார்கள் என்பதற்காக சிங்கள் தலைவர்கள் எதனையும் நிறைவேற்றிவிடுவார்கள் என்றுமில்லை என்பதுதான் அதன் யதார்த்தம். ஆனால், பன்னாட்டரங்கில் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ளவும், அழுத்தங்களைச் சமாளிக்கவுமாக சிங்களத் தலைவர்கள் அத்தகைய வாக்குறுதிகளையாவது வழங்குவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள். ஆனால், அப்படிப்பட்ட ஒப்புக்குச்சப்பாணியான வாக்குறுதியைக்கூட நிறைவேற்றும் எண்ணம் எதுவும் தனக்கில்லை என்பதைதான் அநுர தனது உரையின் மூலம் தெளிவாக உணர்த்தி நிற்கின்றார்.

இந்த ஐ.நா. உரையைப் பார்க்கும்போது அநுரவின் ஆளும்தரப்பும் கடந்தகால இலங்கை ஆளும்தரப்புகள் சொல்லியதைப் போன்று குறிப்பாக ராஜபக்சக்கள் சொல்லியதைப் போன்று தமிழர் பிரச்சினை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகக் கருதிக் கடந்துபோகவே முயற்சிப்பது தெளிவாகின்றது. தமிழர்களின் வாக்குகளுக்காக யாழ்ப்பாணத்தில் ஜேவிபியினரும் என்பிபியினரும் தீர்வு, புதிய அரசமைப்புக் குறித்துப் பேசினாலும் அவர்களின் நிகழ்ச்சி நிரலில் அவை இல்லை என்பதையே அநுரவின் உரை தெளிவுபடுத்துகின்றது.

இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால் போர் குறித்து அநுர தனது உரையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள்தான்.

'குழந்தைகள் மற்றும் அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கையை ஒரு கால்பந்தாட்டமாக மாற்றுவது சந்தர்ப்பவாத அதிகார அரசியலின் துயரமாகும். மற்றவர்களின் வாழ்க்கையை தங்கள் அதிகாரத்தை அதிகரிக்க செல்வாக்கு செலுத்தவும் ஒடுக்கவும் யாருக்கும் உரிமை கிடையாது. ஆட்சியாளர்களின் பங்கு உயிர்களை அழிப்பது அன்றி, உயிர்களைப் பாதுகாப்பதாகும்' என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். அச்சொட்டாக இலங்கையில் அவரது ஜேவிபி கட்சியினரும் என்பிபியினரும் எதைச் செய்தார்களோ அது தவறு என்று உலகிற்குப் போதிக்கிறார். அமைதிப் பேச்சுக்களை முறித்து போரை நடத்தவேண்டும் என்று ஊர்வலம் போன ஒரு தலைவர் பன்னாட்டு அரங்கில் நின்றபடி ஊருக்கு உபதேசம் செய்வதைப் போன்ற வேடிக்கை வேறென்ன இருக்கிறது.

இதனால்தான் சிங்களத் தரப்பில் இருக்கக்கூடிய மிகச் சில நேர்மையான தலைவர்களில் ஒருவரான சிறீதுங்க ஜயசூரிய, அநுர ஒரு சந்தர்ப்பவாதி என்று நேற்று யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தார். ஐநா.வில் அநுர ஆற்றிய உரையைப் பார்க்கும்போது அது சரி என்றுதான் தோன்றுகின்றது. ஒரு சந்தர்ப்பவாதிக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் வாக்களித்தவர்கள்தான் இப்போது பதில் சொல்லவேண்டும். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அநுர ஒரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியத்தின் திட்டங்களை அப்படியெ செயற்படுத்துகின்றார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அநுர நினைத்தால் தமிழர்களின் இனப் பிரச்சினையை அவரால் உடனடியாகத் தீர்க்க முடியும்.அரசியல் தீர்வுக்கு அவரது ஒரு கையெழுத்துப் போதும். ஆனால, அவர் அதைச் செய்யமாட்டார்.

யாழ்ப்பாணத்தில் இப்போது கிரிக்கெட்ட மைதானமா அவசியம். இங்குள்ள விளையாட்டு வீரர்களுக்கு ஒரு மைதானம் தேவைதான், அதை மறுப்பதற்கில்லை. ஆனால், யாழ். மக்களுக்கு முன்னுரிமை கொடுத்துத்தீர்க்கவேண்டிய பல பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த மைதானத்தைக் காட்டி தமிழர்களின் பிரச்சினையை மூடிமறைப்பதற்குத்தான் முயற்சிக்கிறார்கள்.

வடக்கில் இருந்து பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்களில் ஒருவருக்குக்கூட அமைச்சர் பதவி வழங்கவில்லை அநுர. இன, மத, சாதி பேதமற்ற ஆட்சியையே தாங்கள் நடத்துவதாக வடக்கிற்கு வந்து மேடைகளில் முழங்கும் அநுர தனது அமைச்சரவையில் வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களை ஓரங்கட்டி வைத்திருக்கிறார்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தைச் சாராத ஒருவரை யாழ்ப்பாணத்தின் அமைச்சராக்கி யாழ்ப்பாண மக்களை இழிவுபடுத்தியிருக்கிறார். இதற்குக் காரணம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை அமைச்சராக்கினால் அவர் அரசியல் தீர்வு குறித்துத் தமக்குக் குடைச்சல் கொடுப்பார் என்பதே.

மாகாண சபைத் தேர்தலையும் அநுரவின் ஆளும்தரப்பு ஒத்திவைக்கப் பார்க்கிறது. இதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

ஐ.நாவிற்குச் சென்று பாலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் அநுர, இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்து ஒருபோதும் நடவடிக்கை எடுக்கமாட்டார். ஏனெனில் அவர் ஓர் இனவாதக் குடும்பத்தின் பின்னணியிலிருந்து வந்தவர்.

நாட்டில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும. அத்தோடு அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படவேண்டும்.

வடக்குகிழக்கில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்கவும் விரைவான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதுமட்டுமல்லாது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஆளும்தரப்பு முழு நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றார்.

ஐக்கிய சோஷலிச கட்சியின் முக்கியஸ்தர் சிறிதுங்கா ஜெயசூர்யாவின் ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் இன்று(25) நடைபெற்றது.

# இலங்கையில் 51 லட்சம் மந்திகள்

விலங்குகணக்கெடுப்புக்காக 39 இலட்சத்து 16,314 ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கையில் 51 இலட்சத்து 97,517 ஆயிரம் மந்திகள், 17 இலட்சத்து 47,623 குரங்குகள், 26 இலட்சத்து 66,630 மர அணில்கள், 42 இலட்சத்து 85,745 மயில்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதென விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வேளையின்போது புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் விலங்குகள் கணக்கெடுப்பு 2025.03.15 ஆம் திகதியன்று யாழ். மாவட்டத்தில் நெடுந்தீவை தவிர்த்து ஏனைய சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டது. இந்தக்கணக்கெடுப்புக்கு 39 இலட்சத்து 16,314 ரூபா செலவிடப்பட்டது. இந்த விலங்கு கணக்கெடுப்புக்கு பல கோடி ரூபாய் செலவிடப்பட்டதாக எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது.

விலங்கு கணக்கெடுப்பின் பெறுபேறு கடந்த ஏப்ரல் சகல பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக விவசாயத்துறை அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றது. இதற்கமைய இலங்கையில் 51 இலட்சத்து 97,517 ஆயிரம் மந்திகள், 17 இலட்சத்து 47,623 குரங்குகள், 26 இலட்சத்து 66,630 மர அணில்கள், 42 இலட்சத்து 85,745 மயில்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்தகாலங்களில் விலங்கு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. இதனால் காட்டு விலங்குகளால் பயிர்செய்கைகளுக்கு ஏற்படும் விளைவை மதிப்பிடுவதிலும், விலங்குகளை கட்டுப்படுத்துவதிலும் சிக்கல் காணப்பட்டது. காட்டு விலங்குகளை கட்டுப்படுத்தும் நோக்கில் தான் இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த கணக்கெடுப்பு தரவுகள் 50 சதவீதளமவில் உறுதியானதாக அமையாது என்பதை அறிவோம். இருப்பினும் மிகுதி 50 சதவீதமான தரவுகள் உறுதியானவை. முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை வெற்றியளித்துள்து.

இந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு காட்டு விலங்குகளை கட்டுப்படுத்த தொழில்நுட்ப ரீதியில் உரிய நடவடிக்கைகள் விவசாயத்துறை மற்றும் வனவளத்துறை திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

## பதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்க முடியாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயங்களில் தேசிய முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, தொடக்கத்தில் அளிக்கப்பட்ட பிரேரணைக்குப் பதிலாக பிறிதொரு பிரேரணையை அளிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு இந்தச் சபைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது சபைக்கு இதனை அறிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு பதில் அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவால் 12.08.2025 அன்று அளிக்கப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் 08.09.2025 ஆம் திகதியன்று நான் வெளியிட்ட அறிவிப்புக்கு மேலதிகமாக, இந்த அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

தொடக்கத்தில், நாடாளுமன்றத்தில் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதற்குப் பொறுப்பாவார் என்றும், எந்தவொரு ஒழுங்குப் பிரச்சினையிலும் அவரது முடிவு மேல்முறையீட்டிற்குத் விவாதிக்கப்படாது என்றும், அறிவிப்புக்குப் பிறகு செய்யப்படும் ஒரு நிலையான தீர்மானத்தைத் தவிர, நாடாளுமன்றத்தால் மதிப்பாய்வு செய்யப்படாது என்றும் கூறும் நிலையியற் கட்டளை 76(1) ஐ இந்த சபைக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இலங்கையின் 1978 அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள், ஒரு தனிப்பட்ட அமைச்சரவை அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது வேறு எந்தத் திணைக்களத்தை வைத்திருப்பவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிவது குறித்து வரையறை இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் தொடர்பான ஒரே ஏற்பாடு அரசமைப்பின் பிரிவு 49(2) ஆகும், இது ஒரு ஆளும்தரப்பிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மட்டும் குறிப்பிடுகிறது.

இருப்பினும், அரசமைப்பு மற்றும் நிலையியற் கட்டளைகளில் வரையறை இருந்தபோதிலும், பிரதமர், அமைச்சரவையின் அமைச்சர்கள் ஆகியோருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன, இதனால் அத்தகைய முன்னுரிமையின் சட்ட அடிப்படையே கேள்விக்குள்ளாகின்றது.

சர்வதேச சூழலில், நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் ஆளும்தரப்பு, அமைச்சர்கள் குழு முழுவதும் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதேபோல், இலங்கை அரசமைப்பின் 42, 43 மற்றும் 44 பிரிவுகள், அமைச்சரவையின் கூட்டு மற்றும் தனிப்பட்ட அமைச்சு பொறுப்பை வழங்குகிறது.

இலங்கையில் தற்போது, அரசமைப்பின் பிரிவு 46(1) இன் கீழ், அமைச்சர்கள் அமைச்சரவையின் அமைச்சர்களுக்கு பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், அரசமைப்பின் பிரிவு 46(2) இன் கீழ் செயல்படும் தற்போதைய ஆளும்தரப்பின் அமைச்சரவையின் அமைச்சர்கள், எந்தவொரு தத்துவம் அல்லது செயல்பாடு தொடர்பான எந்தவொரு அதிகாரத்தையும் கடமையையும் பிரதி அமைச்சர்களுக்கு வழங்கவில்லை.

இருப்பினும், அரசமைப்பின் பிரிவு 46(1) இன்படி மற்றும் அரசமைப்பின் பிரிவு 74 உடன் இணைத்து வாசிக்கையில், அமைச்சர்கள் சார்பாக பிரதி அமைச்சர்கள் நிலையியற் கட்டளை 32(2) இன்படி செயல்படுகிறார்கள் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மேற்கூறிய காரணங்களால், நிலையியற் கட்டளை 27(3) இன்படி இந்தப் பிரேரணை நடைமுறைக்கு மாறானது என்று நான் சபைக்கு அறிவுறுத்துகிறேன்.

மாற்றாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது குறிப்பாக சபாநாயகர் உட்பட பொது மன்றத்தில் பதவி வகிக்கும் உறுப்பினர்களின் நடத்தையை தற்செயலாக விமர்சிப்பது ஒரு முக்கிய தீர்மானத்தின் மூலம் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. இங்கிலாந்து நடைமுறையில் ஆளும்தரப்புக் கொள்கை அல்லது ஒரு அமைச்சரை விமர்சிக்கும் தணிக்கை பிரேரணைகளை தாக்கல் செய்யலாம்.

அதன்படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயங்களில் தேசிய முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, தொடக்கத்தில் அளிக்கப்பட்ட பிரேரணைக்குப் பதிலாக பிறிதொரு பிரேரணையை அளிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு இந்தச் சபைக்குத் தெரிவிக்கவிரும்புகிறேன். தாக்குதல் சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் சட்டமா அதிபரின் கருத்துப்படி, பிரேரணையில் உள்ள குறிப்பிட்ட விடயங்கள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்குடன் நேரடி தொடர்பில் இல்லை என்றார்.

## இரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதோடு இரண்டாவது தடவையாகவும் சபாநாயகர் அதனை சபைக்கு, அறிவித்துள்ளார். நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரிப்பதற்கு அடிப்படையாக அமைந்த இரண்டு அறிக்கைகளையும் சபையில் அளிக்குமாறு கோருகிறோம்.

ஜகத் விக்கிரமரத்னவுக்கு அனுப்பிவைத்த அறிக்கையை நாங்கள் கோரவில்லை. சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் அலுவலகம் சபாநாயகருக்கு அனுப்பி வைத்த அறிக்கைகளையே நாங்கள் கோருகிறோம். பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவை அன்றே சுட்டிக்காட்டினேன் என்றார்.

இதன்போது சபைக்குத் தலைமைதாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 76(1)ஜக் குறிப்பிட்டு அதன் பிரகாரம் செயற்படுங்கள் என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதன்போது எழுந்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, நிலையியற் கட்டளையின் 76 பிரகாரம் சபாநாயகரினால் விடுக்கப்படும் அறிப்பை சவாலுக்குட்படுத்த முடியாது. சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் அலுவலகம் அளித்த அறிக்கையை கோருகிறார்கள். ஆகவே அறிக்கையை அளிக்க முடியுமா, முடியாதா என்பதை அறிவியுங்கள். இந்தப் பிரச்சினையை தொடர்ந்து பேச முடியாது என்றார்.

அடுத்து ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா, நிலையியல் கட்டளையின் 76(1) பிரிவு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் போன்று சபாநாயகருக்கும் பொருந்தும். செப்டெம்பர் 10 சபைக்கு அறிவிப்பு விடுத்து குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் புறக்கணிப்பதாக்கக குறிப்பிட்டீர்கள். அந்தச் செயற்பாடு சிறுபிள்ளைத் தனமானது என்று குறிப்பிட்டோம். இன்று (நேற்று) இரண்டாவது தடவையாகவும் சபைக்கு அதே அறிவிப்பை இரண்டாவது முறையாகவும் முன்வைத்துள்ளீர்கள். இது நிலையியல் கட்டளை 76(1) பிரிவுக்கு முரணானது. ஆகவே இந்த அறிவிப்பை மீளப்பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, நீங்கள் (சபாநாயகர்) முதலாவதாக விடுத்த அறிவிப்பை இரண்டாவது தடவையாகவும்

தொடர்ச்சி 7ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# நீதிமன்ற உத்தரவின்றி ஆளும்தரப்பு யாரையுமே கைது செய்தது இல்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

நீதிமன்ற உத்தரவில்லாமல் எமது ஆளும்தரப்பு யாரையும் கைது செய்ததில்லை. பாதாள குழுக்களை போஷித்து அதன் மூலம் நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டுவந்து விநியோகிப்பவர்கள் மொட்டு கட்சியில் இருப்பவர்கள் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும். அதனால் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டை எமது ஆளும்தரப்பின் மீது சுமத்தி தப்பித்துக்கொள்ள முடியாதென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் உரையாற்றிக் கொண்டிக்கையில் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது நாமல் எம்.பிக்கும் ஆனந்த விஜேபால அமைச்சருக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. அமைச்சர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

நீதிமன்ற உத்தரவின்றி பொலிஸார் இராணுவத்தினர் என யாரையும் எமது ஆளும்தரப்பு கைது செய்ததில்லை. அதனால் படையினரைக் கைது செய்திருப்பதாக நாமல் தெரிவித்த விடயத்தில் எந்த உண்மையும் இல்லை. முன்னாள் கடற்படை தளபதி, அவர் புலனாய்வு பிரிவில் இருக்கும்போது செய்த ஒரு நடவடிக்கை காரணமாக, நீதிமன்ற உத்தரவின் பேரிலே கைதுசெய்யப்பட்டார்.

அதேபோன்று கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் வரும் முறைப்பாடுகள் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். போதைப்பொருளுடன் எமது ஆளும்தரப்பைத் தொடர்புபடுத்த நாமல் முயற்சித்தார். ஆனால் பொதைப்பொருளுடன் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினரான மனம்பேரியே தொடர்புபட்டவர் என்பது யாரும் அறிந்த விடயம். அவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் இணைப்புச் செயலாளர். அதனால் பொதைப்பொருளுடன் தொடர்புபட்ட பலர் மொட்டு கட்சியில் இருக்கின்றனர்.

நாட்டுக்குள் பொதைப்பொருளை யார் கொண்டுவருகிறார்கள் என்பதை மக்களுக்கு தெரியும். அதனால் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை மற்றவர்களின் மீது சுமத்தவே தற்போது இவர்கள் முயற்சிக்கின்றனர். இவர்களின் இந்த குற்றச்சாட்டுக்களுக்கு நாட்டு மக்கள் ஏமாறப்போவதில்லை. இந்த நாட்டில் பாதாள குழுக்களை போஷித்து, அதன் மூலம் பொதைப்பொருளை நாட்டுக்கு கொண்டுவந்து, விநியோகித்து வந்தவர்களை மக்கள் துரத்தியடித்த பின்னர், தற்போது எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு, எம்மை விமர்சித்து வருகின்றனர் என்றார்.

இதன்போது ஒழுங்கு பிரச்சினை எழுப்பி, எழுந்த நாமல் ராஜபக்ச, எமது கட்சியில் தேர்தலில் போட்டியிட்ட, சம்பத் மனம்பேரியை நாங்கள் பாதுகாக்கவில்லை. அவர் போதைப்பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டிருந்தால், அவருக்கு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர் உங்கள் கட்சியின் தேசியல் பட்டியலில் இருந்தவரை மறைப்பதுபோல் நாங்கள் மறைப்பதில்லை. போதைப்பொருள் தொடர்பில் புலனாய்வு துறையில் இருந்து வந்த உத்தரவை ஏன் செயற்படுத்தவில்லை என்பதை தெரிவிக்க வேண்டும் என்றார்.

அதற்கு அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளிக்கையில், எமக்கு வந்த தகவலுக்கமைய, தேசிய அபாயகர ஔடதங்கள் அமைப்புடன் சென்று அதனை பரிசோதனை செய்தோம். தற்போது விசாரணை இடம்பெறுகிறது. மாறாக உங்களைப்போன்று, சம்பவம் ஒன்று இடம்பெற்றவுடன் சம்பந்தப்பட்ட இடத்துக்கு சென்று குடு லான்சாவை அணைத்துக்கொண்டது போன்று நாங்கள் செயற்படுவதில்லை. புலனாய்வு தகவல்களின் பிரகாரமே செயற்படுகிறோம் என்றார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காணாமல்போன அரசியல் தீர்வு

இலங்கை அரசுத் தலைவர் நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் உரையாற்றினார். உலக அரங்கில் இடம்பெற்ற அந்த உரையில் அவர் பொருளாதார நிலைமைகள், அபிவிருத்தி முயற்சிகள், சுற்றுச்சூழல் சவால்கள், உலக நாடுகளுடனான ஒத்துழைப்புகள் போன்றவை குறித்து விரிவாகப் பேசியார். ஆனால், இலங்கையின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கான தீர்வும், தமிழர்களுக்கான நீதி வழங்கப்படுதல் பற்றிய அடிப்படைச் சிக்கலும் அந்த உரையில் காணாமல் போயிருந்தது.

வடகிழக்கு மக்களின் பிரச்சினைகள், போரின் நினைவுகள், காணாமல் போனோர், நில உரிமைச் சிக்கல்கள், அரசியல் அதிகாரப் பகிர்வுபோன்றவிடயங்கள்இன்னமும்தீராதவையாகவேஇருக்கின்றன. ஆனால் இத்தகைய முக்கியமான விடயங்கள் குறித்து உலக அரங்கில் அரசுத் தலைவர் ஒரு சொல்லும் பேசாதிருப்பது, மீண்டும் ஒருமுறை அரசின் உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்க சர்வதேச ஒத்துழைப்பு தேவைப்படுவது உண்மை. ஆனால் பொருளாதார பிரச்சினையோடு இணைந்துள்ள அரசியல் பிரச்சினையை புறக்கணித்தால், நாட்டின் நிலைத்தன்மை எப்போதும் சந்தேகத்திற்குரியதாகவே இருக்கும். பொருளாதார முன்னேற்றம் அரசியல் தீர்வுடன் இணைந்திருக்காவிட்டால், அந்த முன்னேற்றம் நிலையானதாக முடியாது. இதுவே வரலாற்று உண்மை.

தமிழர்கள்கடந்தபலதசாப்தங்களாகக்கேட்டுவந்தகோரிக்கைகள் எளிமையானவை:

- அரசியல் அதிகாரப் பகிர்வு,
- நியாயமான நில உரிமையும் இறைமையும்,
- போர்க்குற்ற விசாரணை,
- காணாமல் போனோரின் உண்மை நிலை,
- சம உரிமைகள்.

ஆனால், அரசுத் தலைவர் ஐ.நா மேடையில் பேசும்போது இவை குறித்து பேசாமல் இருப்பது, தமிழர் சமூகத்திற்கு மீண்டும் மீண்டும் வழங்கப்படும் புறக்கணிப்பின் சின்னமாகும். உலக அரங்கில் இது மறைக்கப்படலாம் என்று நினைத்தாலும், உள்ளார்ந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது.

ஐ.நா. சபையில் அரசுத் தலைவர் உரை ஆற்றுவது ஒரு முக்கியமான அரசியல் நிகழ்வு. அங்கு கூறப்படுவது ஆளும்தரப்பின் கொள்கை நிலைப்பாடாகும். அப்படிப்பட்ட கொள்கை உரையில் தமிழர்களின் பிரச்சினை இடம்பெறாமல்போவது, நாட்டின் உண்மையான பன்முகத்தன்மையையும் பிரச்சினைகளையும் வெளிப்படுத்த மறுக்கும் அணுகுமுறையைக் காட்டுகிறது. இதனால் சர்வதேச அரங்கில்கூட இலங்கை இன்னமும் அரசியல் சிக்கல்களைத் தவிர்க்கும் நாடாகவே பார்க்கப்படும் அபாயம் உண்டு.

தமிழர் சமூகத்தின் நீதி தேடல், ஒரு பிரிவினைவாதக் கோரிக்கை அல்ல. அது மனித உரிமை அடிப்படையிலான ஒரு அடிப்படை வேண்டுகோள். எந்தவொருஜனநாயகநாட்டிலும்சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதே அரசின் கடமை. இலங்கையில் அந்தக் கடமை நிறைவேற்றப்படவில்லை என்பதே வரலாறு. பன்னாட்டுச் சமூகமும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்றைய அரசியல் சூழலில் பொருளாதாரம் மட்டுமின்றி அரசியல் சமரசமும் தேவை. தமிழர்களின் பிரச்சினையைத் தவிர்த்துவிட்டுச் செல்லும் முயற்சி, எதிர்காலத்தில் புதிய முரண்பாடுகளை உருவாக்கும் அபாயத்தை அதிகரிக்கும். நிலையான அமைதியும் வளர்ச்சியும் கிடைக்க வேண்டுமெனில் அரசுத் தலைவர் தமிழர்களின் நீதி தேடலுக்குப் பதிலளிக்க வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று.

உலக அரங்கில் உரையாற்றியபோது அரசுத் தலைவர் இந்தக் குறிப்புகளைச் சொல்லியிருந்தால், அது நாட்டின் சர்வதேச நம்பிக்கையை உயர்த்தியிருக்கும். ஆனால் அவற்றைத் தவிர்த்தது, இலங்கை இன்னும் தன் உள்நாட்டு அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தயங்குகிறது என்பதையே அவரது உரை வெளிப்படுத்தியிருக்கிறது.

தமிழர்களின் பிரச்சினையை புறக்கணித்துக்கொண்டு, உலக அரங்கில் அழகான வார்த்தைகளைப் பேசுவதால் எந்த நன்மையும் இல்லை. மக்கள் எதிர்பார்ப்பது உண்மையான நடவடிக்கை. நீதி, சமாதானம், சம உரிமைகள் ஆகியவற்றை வழங்கும் துணிவு அரசிடம் இருக்க வேண்டும். அதுவே நாட்டை முன்னேற்றும் அடிப்படை வழி.

ஐக்கிய நாடுகள் சபையில் அரசுத் தலைவர் ஆற்றிய உரை, தமிழர் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாததும், அரசியல் பிரச்சினைக்கு வெளிப்படையான தீர்வை முன்வைக்காததும் மிகவும் கவலையூட்டுகின்றது. கண்டிப்புக்குரியதாகிறது. நாட்டின் உள்ளார்ந்த உண்மைகளை எதிர்கொள்ளும் துணிவு அரசுத் தலைவருக்குத் தேவை. அது இல்லாமல் இலங்கையின் அரசியல் பிரச்சினையும், தமிழர்களுக்கான நீதி தேடலும் என்றும் முடிவிற்கு வராது.

# கல்வித் திட்டத்தில் தமிழர் வரலாறு திட்டமிட்டே மறைக்கப்படுகின்றது

## சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

கல்வி திட்டத்தில் வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழரின் வரலாறுகள் மற்றும் தமிழர் அடையாளங்கள் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன. புதிய கல்வி சீர்த்திருத்தத்தில் இவற்றுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும். புதிய கல்வி மறுசீரமைப்பு மாணவர்களுக்கு சுமையானதாக அமையக்கூடாது என இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது நிலையியல் கட்டளை 27/2இன் கீழ், பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணியிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போது இதனை வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சமய பாடத்தில் சைவ சமயம் சீராக முன்னெடுக்கப்படவில்லை. வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழர் வரலாறு மற்றும் தமிழ் மொழி இலச்சினைகள் அடையாளங்கள் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன. இவற்றுக்கான தீர்வுகள் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கொண்டு வரப்படுமா?

இலங்கையன் கல்வித்துறையில் கலைத்திட்ட மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் இப்பொழுது கொண்டுவரப்படுகின்றது. இவ்விடயம்தொடர்பானசில விளக்கமூட்டும் கூட்டங்களும் தங்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது. ஆனால் புதிய கலைத்திட்டம் மாணவர்களுக்கு சுமையைக் குறைப்பதாகவும், கல்வியில் புதிய புத்தாக்கத் தேடல்களைக் கொண்டு வருவதற்கான வழிமுறையாகவும் இருக்குமென கூறப்படுகின்றது.

தரம் 06 இற்கு 15 கட்டாய பாடங்கள், தெரிவு பாடங்கள்03என18பாடங்களாயின்நேரஅட்டவணை தயாரிப்பதில் உள்ள இடர்பாடுகள், நிலை மாற்றுத் திறன்களில் மாணவன் 2 பாடங்களைத் தெரிவு செய்தல், இவ்வளவு காலமும் தவணைக்கு 265 மணித்தியாலங்களாக இருந்த மாணவனின் கற்றல் நேரம் தற்போதைய புதிய கலைத்திட்ட வரவால் 365 மணித்தியாலங்களாக வர உள்ளது. இதுவரை காலமும் இருந்ததை விட மாணவனுக்கு 30வீத சுமை அதிகரித்துள்ளது.

சமய பாடங்களில் சைவ சமயம் சீராக முன்னெடுக்கப்படவில்லை. வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழர் வரலாறுகள், தமிழ் இலச்சினைகள் அடையாளங்கள் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன. இவற்றுக்கான தீர்வுகள் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கொண்டு வரப்படுமா?

அத்துடன் புதிய கல்விக் கலைத்திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும்? அதற்கான வெள்ளை அறிக்கை வெளியிடப்படுமா? தேசிய கல்வி நிறுவகத்தில் அமைக்கப்பட்டுள்ள 'கல்வி சார் அலுவல்கள் சபை, கல்விப் பேரவைக்குழு' இரண்டிலும்தமிழ்மொழிசார்ந்தஉத்தியோகத்தர்கள் யாராவது உள்ளடக்கப்பட்டுள்ளார்களா? மற்றும் கலைத்திட்டக்கொள்கைஅல்லதுவெள்ளையறிக்கை சம்பந்தமான விடயங்களில் ஈடுபடுகிறவர்களின் பெயர்ப்பட்டியலைச் சபைக்குச் அளிக்க முடியுமா? அத்துடன்,புதிய கல்வி சீர்திருத்த அமுலாக்க குழுவில் தமிழ் மொழிமூலம் உள்ள பேராசிரியர்கள், பாட நிபுணத்துவம் கொண்டவர்கள் எத்தனை பேர் உள்ளடங்கியுள்ளார்கள்? என்பதனை கேட்கின்றேன்.

இதேவேளை கல்வி அமைச்சில் தமிழ் மூலமான உத்தியோகத்தர்கள் 20 துறைகளில் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. அதேபோன்று சைவ சமய பாடத்தில் நடராஜரின் வடிவத்தை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கும் போது சிலர் இதனை எதிர்ப்பதாக அறிகின்றோம். நீங்கள் ஒவ்வொரு பாடதுறைகளிலும் அது தொடர்பான பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நிபுணர்கள், சமய நிறுவனங்களையும் அழைத்து எங்களுடனும் கூட்டத்தை ஏற்பாடு செய்து தீர்மானங்களை எடுக்குமாறு கேட்கின்றேன்.அத்துடன் வரலாறு, சித்திரம் பாடங்களில் தமிழர்களுடைய வரலாறுகள், அடையாளங்கள், மன்னர்களின் பெயர்கள் நிறைய இல்லாமல் செய்யப்படுகின்றது. அந்த விடயங்களில் உங்களின் கரிசனைகளை அறிய முடியுமா? என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணி

2026 ஜனவரியில் முதலாம் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கான பாடத்திட்ட திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும். அதன் பிறகு படிப்படியாக மற்ற வகுப்புகளுக்கும் இந்தத் திருத்தங்கள் செயல்படுத்தப்படும். முழுமையான திருத்தங்களைப் பற்றிய முழு ஆவணம் விரைவில் அமைச்சரவைக்கு அளிக்கப்படுமாறு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் சமயம்,வரலாறு உள்ளிட்ட பாடங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட கல்வி குழுக்களுடன் கலந்துரையாடப்படுகின்றன என்றார்.

# பாதாள உலக நபர்கள் இருவர் ரி-56 துப்பாக்கிகளுடன் கைது

வெலிகம பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது மிதிகம ருவானின் நெருங்கிய உறவினர் உட்பட இரண்டு சந்தேகநபர்கள் ரி-56 ரக 4 துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதயகுமார வுட்லர் தெரிவித்துள்ளார்.

காலி வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொலாஸ்கொடவத்த, இப்பாவல ஆகிய பகுதிகளில் புதன்கிழமை மாத்தறை பொலிஸ் விசேட அதிரடிப் படைப்பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய அதிகாரிகள் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து சந்தேகநபர்கள் இருவரை கைது செய்துள்ளனர்.

மேற்படி நடவடிக்கையின் போது ரி- 56 ரக துப்பாக்கிகள் 4 , ரி-56 ரக துப்பாக்கிகளுக்குரிய 28 தோட்டாக்கள், 2 கிராம் 850 மில்லி கிராம் எடையுடைய ஹெரோயின் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

மேலும் போதைப்பொருள் விற்பனையின் மூலம் பெறப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் 830,000 ரூபா ரொக்கப் பணமும் கைதான நபரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சந்தேகநபர் பூஸா அதி உயர் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலக குழு தலைவரும் போதைப்பொருள் கடத்தல் காரருமான விதானகே ருவான் சாமர என்னும் மிதிகம ருவானின் நெருங்கிய உறவினர் என தெரியவந்துள்ளது.

மிதிகம ருவானின் தந்தையின் மூத்த சகோதரியின் மகளின் கணவர் இவ்வாறு கைதாகியுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதயகுமார வுட்லர் தெரிவித்துள்ளார்.

38 வயதுடைய இப்பாவல வெலிகம பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து குற்றச்செயல் ஒன்றுக்காக ஆலோசனை வழங்கிய 37 வயதுடைய இப்பாவத்த பகுதியை சேர்ந்த பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை சந்தேகநபர்கள் தொடர்பில் வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஏமாற்றம் தான் மிஞ்சும்

என்.சத்திய மூர்த்தி

ஜெனிவாவில், இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக மீண்டும் பதிமூன்றாவது திருத்தத்தை குறித்து பேசிய கையோடு, கொழும்புவில் எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைவர்கள் சிலரோடு பேசிய இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா,, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அனைத்து கட்சிகளும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று சாரப்படும்படி பேசினார் எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில் அவர் தங்காலை சென்று, முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவையும் சந்தித்து உரையாடி உள்ளார்.

இந்திய தூதுவர் என்னவோ தென்னிலங்கை கட்சிகளை மட்டுமே மனதில் வைத்து பேசினார் என்று கருதவேண்டும். அவர் தொடர்ந்து தமிழ் அரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து உரையாடினார். அப்போது அவர்கள் தங்களது அழுக்குகளை எல்லாம் அவரது முன்னால் மீண்டும் ஒரு முறை அலசினார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசியலை அறிந்த எவருமே, அதிலும் குறிப்பாக தமிழ் அரசியலை உணர்ந்தவராய் இருந்தால், இந்திய தூதுவரின் இந்த சந்திப்புக்களுக்கு இல்லாத அர்த்தங்களை கற்பிக்க மாட்டார்கள். உண்மை என்னவோ, கடந்த சில கிழமைகளாக, ஐக்கிய மக்கள் கட்சியின் இரண்டாம் கட்ட தலைவர்கள் சஜித் பிரேமதாசாவை தங்கள் வழிக்கு கொண்டுவந்து விட்டதாகவே கருத இடமிருக்கிறது.

அதாவது, தாய் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி மற்றுமுள்ள தென்னிலங்கை கட்சிகளுடன் இணைந்து பணியாற்றி ஒரணியில் தேர்தலை சந்தித்தால் மட்டுமே, ஆளும் ஜே.வி.பி.-என்.பி.பி. கூட்டணியை வெல்வது குறித்து யோசிக்கவாவது முடியும். இதே முடிவை சஜித் முன்னரே எடுத்திருந்தால், யார் கண்டது, அவரே அரசுத் தலைவராகக்கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுடனான தனது சொந்த ஈகோ பிரச்சினைகளுக்கு தென்னிலங்கை அரசியலை பலி கொடுத்துவிட்டு. இப்பொழுது அவருக்கு கண்கெட்ட பிறாகவது சூர்ய வணக்கம் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றி உள்ளது.

இன்றளவும், எதிர்காலத்தில் அத்தகைய கூட்டணியில் ராஜபக்சக்களின் மொட்டு கட்சி இடம்பெறுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். நாடு தழுவிய உள்ளாட்சி தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் நமால் ராஜபக்சாவிற்கு அடுத்த தேர்தலிலேயே தான் நாட்டின் தலைவர் ஆகிவிடலாம் என்ற கனவு தோன்றி உள்ளது.

நமால் சரியான வகையில் சிந்தித்தால், அடுத்த தேர்தலில் சஜித் பிரேமதாசாவை ஆதரித்துவிட்டு, அதற்கு அடுத்த தேர்தலிலேயே அவர் களமிறங்கவேண்டும். அதற்குத் தேவையான தென்னிலங்கை மக்கள் ஆதரவு அவருக்கு இருக்கிறதோ இல்லையோ, இன்றிலிருந்து பத்தாண்டுகள் கழிந்தும் அவருக்கு தேர்தல் பணிகள் செய்யும் அளவிற்கு வயதும் உடல் வலிமையும் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், அவரது ஆதரவைக் கேட்டுப் பெறும் அளவிற்கு சஜித் கீழே இறங்கி வருவாரா என்பது வேறு விடயம்.

## ஏமாற்றமே மிஞ்சும்

அதற்காக, தற்போதைய அரசு மாறியே தீர வேண்டும் என்பதல்ல பொருள். அது வாக்காளர்களின் முடிவு. அவர்களது ஏகபோக உரிமை. ஆனால், அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதையாக, ஏதோ தற்போதைய அரசு அடுத்த ஐந்தாண்டுகளில் மாறிவிடும், அது வரை தங்களது மனம்போன போக்கில் அரசியல் செய்தால்போதும், தொடர்ந்து வரும் அரசு தமிழ் மக்களின் தார்மீக எதிர்பார்ப்புகளை நிறைவேற்றித் தரும் என்று இங்கு யாராவது எண்ணி செயற்பட்டால், ஏமாற்றமே மிஞ்சும்.

ஒன்று. தற்போதைய அரச தலைவருக்கு இன்னும நான்கு ஆண்டு ஆட்சி காலம் இருக்கிறது. இரண்டாவது, அவரது தலைமைக்கு நாடாளுமன்றத்தில் அசைக்க முடியாத ஆதரவு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஜே.ஆர்.ஜெவர்த்தனவுக்கு பின்னர், ஒரே கட்சி அல்லது ஒரே சித்தாந்தத்தின் அடிப்படையில் அணி சேர்ந்து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெற்ற முதல் அரசுத் தலைவர் தற்போது பதவியில் இருக்கும் அனுரகுமாரவே தான். இனப் போர் முடிந்த பின்னர், 2010 அரசுத் தலைவர் தேர்தலில்கூட அப்போதைய தலைவர் மகிந்த ராஜபக்சவிற்கு தென்னிலங்கை இத்தகைய வெற்றியைக் கொடுக்கவில்லை.

இரண்டாவது, கோட்டாபய ராஜபக்ச ஆட்சியைப் போல், இந்த அரசு இரண்டு-மூன்று ஆண்டுகளில் சுருண்டுவிடும் என்று யாராவது கருதினால் அதுவும் தவறு. இது போன்ற தவறான எண்ணத்தை சஜித் அனாவசியமாக தனது தொண்டர்களிடம் விதைக்கிறார். அவ்வாறு நடக்காதிருக்கும் பட்சத்தில் அவர்களது ஏமாற்றத்தின் அரசியல் பாதிப்பை அவரும் அவரது தலைமையும்தான் சந்திக்க வேண்டியிருக்கும். என்ன, அடுத்த இரண்டு மூன்று மாதங்களில் என்று வேண்டுமென்றால் சொல்லலாம். அதற்குள் அநுரகுமார, கட்சியையும் ஆட்சியையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும்.

அதாவது, சித்தாந்த அடிப்படையில் உள்கட்சி பூசல்கள் புகையத் தொடங்கி உள்ள இந்த ஆட்சியில்,அநுரகுமார, இப்போது புத்திசாலிதனமாக ஆட்சியைத் தன் வசம் கைப்பற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்.தமிழ் அரசுக்கட்சியின்சாணக்கியன் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் கூறியதுபோல், ஆளும் ஜே.வி.பியின் பொது செயலாளர் ரில்வின் சில்வா அரசுத் தலைவர் போல செயல்படுகிறார் என்ற கருத்து தென்னிலங்கையில் எதிரொலிக்கிறது.

அது போன்றே, சித்தாந்தவாதியாகவே கட்சிக்குள் வளர்க்கப்பட்ட மற்றொரு தலைவரான அமைச்சர் பிமல் ரத்னாயக்கவும் அவ்வப்போது, அரசுத் தலைவர் அநுரவின் முடிவுகளை உள்ளால் இருந்தே குலைக்கப் பார்க்கிறாரோ என்ற சந்தேகமும் தோன்றியுள்ளது. குறிப்பாகத், தமிழர் விடயத்தில், அதிபர் அநுர ஏற்றுக்கொண்ட இந்திய உதவியுடனான பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்தியை, முன்பு முடிவான அளவிற்கு செயல்படுத்த முடியாது என்று அடிக்கடி யாழ்பாணம் வந்துசெல்லும் அமைச்சர் பிமல் ரத்னாயகே கூறியுள்ளார்.

அவர்கூறியது போல்இந்தத்திட்டங்களுக்கு அதிக பொருளுதவி தேவை என்றால், அதனை இந்திய அரச பிரதிநிதிகளுடன் பேசித் தீர்த்திருக்கலாம். ஆனால், அவர் அவ்வாறெல்லாம் முயற்சி செய்ததார் என்று பத்திரிகை செய்திகள் கூறவில்லை.

அமைச்சர் பிமல் ரத்னாயக்கயின் யாழ்பாண பயணங்கள் எப்போதாவது நடைபெறும் மாகாண சபை தேர்தலை குறிவைத்தே மேற்கொள்ளப்படுகிறது என்பது தெளிவு. அதில் தவறும் இல்லை. ஏன், அரசுத் தலைவர் அநுரவும் பிரதமர் ஹரிணியும்கூட அவ்வாறான பயணம் மேற்கொண்டுள்ளார்கள். ஆனால், பிற தென்னிலங்கை அரசியல் தலைவர்கள்போல் அல்லாது, அமைச்சர் பிமல் ரத்னாயகே, வட மாகாண தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை தங்களது அரசு செயல்படுத்தும் என்றெல்லாம் கூறிவிடவில்லை. மாறாக, தங்களது அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே அனைத்து அரசியல் தீர்வுகளும் அமையும் என்ற விடயத்தை, அங்கொன்றும் இங்கொன்றுமாக வீசிச் சென்று வருகிறார்.

## எடுத்தோம்-கவிழ்த்தோம்

இந்த விடயத்தில், அமைச்சர் பிமல் மற்றும் ஜேவிபி கட்சியின் செயலாளர் ரில்வின் ஆகியோருக்குஅமைச்சரவையில்எந்தஅளவிற்கு ஆதரவு இருக்கிறது என்பது தெரியவில்லை. என்றாலும், உள்கட்சி பூசல் என்றால் அதனை வெறுமனே அவர்கள் விட்டுவிடமாட்டார்கள். கட்சியின் சித்தாந்தத்தை முன்னிலைப்படுத்தி அவர்கள் அரசதலைமையுடன் மோதல்போக்கை கடைபிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அவ்வாறானசூழ்நிலைஉருவாகுமென்றால், அதனை தமிழ் அரசியல் தலைமைகள் எவ்வாறு கையாளவேண்டும்? இது குறித்து இங்குள்ள எந்தத் தமிழ் தலைவர்களும் எதிர்பார்த்துக் காய் நகர்த்துபவர்கள் இல்லை. இவர்களைப் பொறுத்தவரையில், எடுத்தோம்- கவிழ்த்தோம் என்பதே அரசியல். ஆனால், தங்களது அதிரடி அரசியலில் ஏதோ அநியாயத்திற்கும் உத்திகள் நிறைந்துள்ளன என்று அவர்கள் மார்தட்டிக் கொள்வார்கள். தங்களை அண்டி பிழைப்பவர்களைத்தொடர்ந்துஏமாற்றுவார்கள்.

தமிழ் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில், இந்த வருடத்திற்கான ஜெனிவா சார்ந்த புலம்பல்களைப் புலம்பித் தீர்த்து விட்டார்கள். அதனையும், ஆளுக்கு ஒரு ராகமாக அபஸ்வரத்தில் பாடி முடித்துவிட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் அடுத்தகட்ட நடவடிக்கை என்பது, மாகாண சபைத் தேர்தல் குறித்தது. அதில் தமிழ் கட்சிகள் வெற்றிபெற்று ஆட்சி அமைக்க வேண்டும் என்பது. அது போன்றே கிழக்கு மாகாணத்தில், தமிழ்-மூஸ்லீம் ஆகிய இரு கூட்டாரின் ஆட்சி அமைய வேண்டும் என்பது.

இதில், இரண்டு மாகாண சபைகளையும் கைப்பற்றுவதில்ஆளும்கூட்டணிமுனைப்பாகச் செயல்படுகிறது. அதுவும் அரசியலில் இயற்கையே. குறிப்பாக, வடமாகாணத்தில் தமிழ் தலைமைகள் தங்களுக்குள் தொடர்ந்து அடி போட்டுக்கொள்ளவதும், தலைவர்கள் ஈகோ பிரச்சினைகளில் ஒரு இனத்தின் அடையாளத்தையும் எதிர்பார்ப்புகளையுமே அழிக்கத் தயார் என்று அழிச்சாட்டியம் செய்யும்போது...

இது தானே நாடாளுமன்ற தேர்தலில் நடந்தது, இதுவேதான் உள்ளாட்சி தேர்தலிலும் நடைபெற்றது. ஆனால், அதன் தாக்கம் குறைவாகவே இருந்தது என்பதே தமிழ் அரசுக் கட்சி போன்றவற்றின் அதீத தலைகனத்திற்கான காரணம். ஆனால், அதுவே எப்போதாவது மாகாண சபை தேர்தல் நடைபெற்றால், தமிழர் தரப்பு ஒன்றோ பலவோ, தனித்தோ சேர்;த்தோ வெற்றிபெற்று ஆட்சி அமைப்பதற்கு அத்தாட்சி இல்லை.

## ஆதரவான மாகாணங்கள்

தற்போதைய எதிர்பார்ப்புகளின்படி, அடுத்த ஆண்டு முதல் 6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்துப்படலாம். அதற்காக அரசு அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என்பதல்ல பொருள். ஏன், முன்பு மகிந்த ராஜபக்ச செய்தது போல், ஆளும் தரப்பினருக்கு ஆதரவான மாகாணங்களில் முதலில் தேர்தலை நடத்திவிட்டு, பின்னர் பிற மாகாணங்களை நெருங்கலாம். அதுவும் அவர்களுக்கு உள்ள ஒரு வாய்ப்பு. ஆனால், தற்போதைய சுயாதீன தேர்தல் ஆணையம் அதற்கு வளைந்து கொடுக்குமா, என்பது வேறு விடயம்.

அவ்வாறான சூழ்நிலை உருவாகும் என்றால், அப்போது குறிப்பாக வட மாகாண தேர்தல் எப்போது நடைபெறும் என்று சொல்லிவிடமுடியாது. குறிப்பாக, முதல் சுற்று தேர்தல்களிலேயே ஆளும் கட்சி தோல்வியை தழுவினால், வட மாகாண தேர்தலை எல்லாம் நடத்தாமலே கிடப்பில் போட்டுவிடலாம். அவ்வாறானால், தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? தேர்தலை நடத்துவதற்காகப் போராட்டம் நடத்த போகின்றன என்றால், ஒன்றாகவா, தனித்தனியாகவா?

அது எப்படியோ, தற்போது தமிழ் மக்கள், அவர்களை நம்பிப் பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புகளின் ஆட்சியை அவர்கள் கையில் ஒப்படைத்து இருக்கிறார்கள். எவ்வாறு தேசிய அரசியலில், ஆளும் தரப்பினின் செயற்பாடுகள் மக்களால் எடைபோடப்படுமோ, குறிப்பாக வட மாகாணத்தை பொறுத்தவரையில், இந்த உள்ளாட்சி அரசுளின் செயல்பாடுகள்தான் தமிழர் தரப்பின் தலையெழுத்தை நிச்சயிக்க போகின்றன. அதில் கோட்டை விட்டுவிட்டு, அரசையும் தென்னிலங்கை தரப்பினரையும் குறி வைத்துத் தொடர்ந்து அரசியல் செய்தால், தமிழ் அரசியல்தலைமைகளுக்குஏமாற்றம்தான் மிஞ்சும்.

காலைக்கதிர் Kalaikkathir

## சுயவிருப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமாக எடுத்துரைத்துள்ளீர்கள். ஆகவே இது முதலாவது அறிவிப்புக்கு முரணானதல்ல,சபாநாயகருக்குவழங்கப்படும் அறிக்கைகள்அனைத்தையும்சபைக்குஅளிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. சபாநாயகரின்அமைதிமற்றும்ஜனநாயகத்தை எதிர்கட்சியினர் பலவீனப்படுத்தும் வகையில் செயற்படுகிறார்கள். எதிர்க்கட்சியினரின் இந்த முறையற்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது என்றார்.

இதன்போது சபாநாயகர் அந்த இரண்டு அறிக்கைகளையும் சபைக்கு அளிக்கிறேன் என்றார்.

## ஈரானிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரிகளையும், பாதாள குழுக்களையும் பாதுகாக்க வேண்டாம். 323 கொள்கலன்கள் விடுவிப்பு விவகாரத்தை ஆளும்தரப்பு மூடி மறைக்கிறதென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவியாழக்கிழமை நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மீதான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து இலக்குகளையும் அடைந்துள்ளதாக ஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. ஆம் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. விடுவித்தவரைகண்டுபிடித்தால்கொள்கலன்கள் இருக்கும் இடத்தை கண்டுப்பிடிக்கலாம். இவர்கள்ஆளும்தரப்பில்உள்ளார்கள்ஆனால் நாங்கள் கொள்கலன்களை விடுவித்தோம் என்று எம்மீது பழி சுமத்துகிறார்கள்.

மக்களை ஏமாற்றி, வரையறையற்ற வகையில் பொய் சொன்னதாகவே இந்த ஆளும்தரப்பு காணப்படுகிறது. தற்போது குடு ஆளும்தரப்பாக மாறியுள்ளது. தமது குறைப்பாடுகளை மறைக்க பிறர் மீது பழிபோடும் கொள்கையுடன் ஆளும்தரப்பு செயற்படுகிறது.

போதைப்பொருள் பற்றிப் பேசப்படுகிறது. உண்மையைக் கண்டுப்பிடியுங்கள். போதைப்பொருள் விவகாரத்தின் பிரதான சூத்திரதாரியையும் ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும்.சர்வதேசபுலனாய்வுப் பிரிவு 'தெஹ்ரானில் இருந்து இரண்டு கொள்கலன்கள் ஊடாக போதைப்பொருள் தொகை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது' என்று ஆளும்தரப்பிற்கு அறிவுறுத்தியுள்ளது. பொலிஸார் சோதனை செய்துள்ளார்கள். ஆனாலும் விடுவிக்கப் பட்டுள்ள கொள்கலன்களில் போதைப்பொருள் இருப்பதாக தற்போது குறிப்பிடப்படுகிறது. பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களில் என்னவிருந்தது?

பழையமுறையில்நாட்டைநிர்வகிக்கலாம் என்று ஆளும்தரப்பு நினைத்துக் கொண்டிருக்கிறது. அந்த பழைய காலம் முடிவடைந்து விட்டது. கொள்கலன்களை விடுவித்துவிட்டு எம்மைத் தூற்றாதீர்கள். புலனாய்வு தகவல்கள் கிடைத்தும் ஏன் நடவடிக்கைகளை எடுக்கவில்லை? உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் பற்றி கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அலட்சியப்படுத்தியவர்கள் இந்த ஆளும்தரப்பின்உயர்பதவிகளில்உள்ளார்கள். தற்போதும் புலனாய்வு தகவல்களை அலட்சியப்படுத்துகிறார்கள்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பழியையும் எம் மீது சுமத்தினீர்கள். குண்டுத் தாக்குதல்தாரிகளின் தந்தை ஜேவிபியின் உறுப்பினர்,குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித உட்பட பலருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் கடமையை செயற்படுத்தாத இரண்டு அதிகாரிகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு உயர் பதவிகளை வழங்கியுள்ளீர்கள்.

எம் மீதான பகைமையை பிறிதொரு வழியில் தீர்த்துக்கொள்ளுங்கள். போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாளக் குழுக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளிக்க வேண்டாம். எம் மீது குற்றஞ்சாட்டும்போது உண்மைக் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வார்கள். ஆகவேபொறுப்புடன்செயற்படுங்கள்என்றார்.

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வான்) நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் முல்லைத்தீவைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும் மூவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் இருந்து பயணித்த சிற்றூர்தியே விபத்தில் சிக்கியது. இதில், செம்மலையைச் சேர்ந்த விமலானந்தன் (வயது 38), வள்ளிபுனத்தைச் சேர்ந்த சசிகுமார் (வயது 31), புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நிஷாந்த் (வயது 25), புதுக்குடியிருப்பு, 9ஆம்வட்டாரம் - மல்லிகைத் தீவைச் சேர்ந்த சேர்ந்த தேனுயன் (வயது 25) ஆகியோர் உயிரிழந்தனர்.

அனுராதபுரம் - குருநாகல்பிரதானவீதியில் தலாவ - மீரிகம சந்திக்கு அண்மையாக மொரகொட என்ற இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றது. இந்த விபத்தில் காயமடைந்த மூவர் தலாவ, அனுராதபுரம் போதனா வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டனர். சிற்றூர்தியின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.O7.

## வருமானம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளை 27 2இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர்தொடர்ந்துதெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய நாட்டில் இருக்கின்ற உள்ளூராட்சி சபைகள் தங்களுடைய பணியாளர்களுடைய சம்பளத்தில், மாநகர சபைகள் 2024 ஆம் ஆண்டு 20 சதவீதமும், பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள் 2025ஆம் ஆண்டு தொடக்கம் 20 சதவீதமுமாக ஒவ்வொரு வருடமும் 20 சதவீதமாக்கக கட்டி வருகின்றபோது 2028 ஆம் ஆண்டு முதல் 100 சதவீதம் முழுமையாக உள்ளூராட்சி சபைகள் தமது ஊழியர்களுடைய சம்பளத்தை வழங்கவேண்டும்என்கின்றஅடிப்படையிலே தற்போது உள்ளூராட்சி சபைகள் நிதிகளைப் பெற்று வருகின்றன.

உண்மையிலேயே நாட்டில் இருக்கின்ற பொருளாதார சூழ்நிலையில் குறிப்பாக வட கிழக்கு மாகாணத்திலே எந்தவொரு பொருளாதார முன்னேற்றமும் முதலீடுகளும் அல்லது அபிவிருத்தி நிதியங்கள் அல்லது வேறு எந்த முதலீடுகளும் இல்லாத நிலையில், யுத்தத்தினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மிக மோசமான அந்த உள்ளூராட்சி சபைகள் தங்களுடைய ஊழியர்களின் சம்பளத்தை கொடுப்பதில் மிகவும் சிரமத்தை எதிர்நோக்குகின்றன.

அவை இன்றைய சூழ்நிலையில் கழிவகற்றல், சுகாதாரம் வசதிகளை வழங்கல், வடிகான் துப்பரவு, மின்விளக்குகள் பொருத்துதல் போன்ற அடிப்படைத் தேவைகளை செய்துவருகின்றன.

இப்பொழுது மாநகர சபைகள் தமது பணியாளர்களின் சம்பளத்தை அவர்களே வழங்கவேண்டியிருப்பதால் பொது மக்களின் எந்தவொரு பணியையும் இந்தச் சபைகளால் செய்ய முடியாமல் இருக்கிறார்கள்.

சில சபைகள் செப்டெம்பர் மாதச் சம்பளத்தைக்கூட வழங்குவதற்கு கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். இதனால், ஏனைய அரசபணியாளரர்கள் வெளியிடங்களிலிருந்து உள்ளூராட்சி சபைகளுக்கு வருவதற்கு இப்போது விருப்பம் தெரிவிப்பதில்லை.=

அதேபோன்று, இந்த உள்ளூராட்சி மன்றங்களில்தற்போதுபணியாற்றுபவர்களும் இடமாற்றங்களை பெற்று வேறு அரச நிறுவனங்களுக்குச்செல்வதற்கு முயற்சிக்கும் நிலைமை காணப்படுகிறது. இதனால் எதிர்காலத்தில் உள்ளூராட்சி சபைகள் இயங்க முடியாத நிலை ஏற்படும்.

ஆளும்தரப்பினுடைய 'வளமான நாடு - அழகான வாழ்கை' எனும் ஆளும்தரப்பின் கொள்கை, 'கிளீன் சிறிலங்கா' என்ற கொள்கைகளைநடைமுறைப்படுத்துவதற்கான முக்கியமான நிறுவனம்தான் இந்த உள்ளூராட்சி சபைகள்.

இந்தஉள்ளூராட்சிசபைகள்பலமில்லாமல் இருந்தால், இந்த வேலைத்திட்டங்களைச் செய்யமுடியாமல்போய்விடும். ஆளும்தரப்பு இது தொடர்பில் அவசரமாக கவனம் செலுத்த வேண்டும். அதேபோல் உள்ளூராட்சி சபைகளுக்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு காலத்தை வழங்க வேண்டும் என்பதுடன் அதற்காக வட்டியில்லாத கடன் வசதிகளை வழங்க வேண்டும் என்றார்.

## சபாநாயகருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக்கு தகைமையற்றவர். ஆகவே சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை வெகுவிரைவில் சபைக்கு கொண்டு வருவோமென ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மீதான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிலையியற் கட்டளையின் பிரகாரமே நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏதேனும்விடயம் பற்றி சபையில் அறிவிப்பு விடுத்ததன் பின்னர் அந்த விடயத்தை மீண்டும் அறிவிக்கும் வழக்கம் கிடையாது. நிலையியல் கட்டளை 76(1)சபாநாயகர், நாடாளுமன்றஉறுப்பினர்கள் உட்படஒட்டுமொத்தநாடாளுமன்றத்துக்குக்கும் பொருந்தும்.

பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிராக கொண்டுவந்த நம்பிக்கையில்லா பிரேரணையைசபாநாயகர் உரியகாரணிகள் ஏதுமின்றி புறக்கணித்தார். இது தொடர்பில் அண்மையில் அவர் சபைக்கு வெளியிட்ட அறிவிப்பில் காணப்பட்ட குறைப்பாடுகளை திருத்திற் கொள்வதற்காக இரண்டாவது முறையாகவும் அதே அறிவிப்பை சபையில் வெளியிட்டார்.

நிலையியல் கட்டளையின் 76(1) பிரகாரம் ஒரு விடயம் பற்றி இரண்டு முறை அறிவிப்பு விடுக்க முடியாது. பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளது. 2025.08.20 ஆம் திகதியன்று சட்டமா அதிபர் தனது நிலைப்பாட்டை சபாநாயகருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

'பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையால் எவ்வித சட்ட பாதிப்பும் இல்லை, குற்றவியல் வழக்குகளுக்கு பாதிப்பில்லை, ஆகவே நடவடிக்கை மேற்கொள்ளலாம்' என்று சட்டமா அதிபர் அறிக்கை அளித்துள்ளார். சட்டமா அதிபரின் கடிதத்தை நான் சபைக்கு அளிக்கிறேன்.

அத்துடன் நாடாளுமன்ற செயலாளர் சபையிடமும் சபாநாயகர் விரிவான அறிக்கை கோரியிருந்தார். 2025.09.03 ஆம் திகதியன்று சபாநாயகருக்கு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் எவ்விடத்திலும் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை புறக்கணிக்குமாறு குறிப்பிடப்படவில்லை. கடந்த காலங்களில் இவ்வாறான நிலை காணப்படாவிடினும், தற்போது அவர் பதவி வகிப்பதால் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதற்கான இயலுமை காணப்படுகிறது என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

2025.09.04 ஆம் திகதி மீண்டும் அறிக்கை கோரப்பட்டுள்ளது. நாடாளுமன்ற செயலாளர் சபை பரிந்துரைகளை முன்வைத்து குற்றப்பிரேரணை கொண்டு வரமுடியும் அல்லது அளிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று குறிப்பிட்டுள்ளது. பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை முன்கொண்டு செல்லலாம் என்றே செயலாளர் சபை அறிக்கை அளித்துள்ளது.

சபாநாயகர் நிலையியற் கட்டளையின் 76(1) பிரிவை மீறியுள்ளார். சபாநாயகர் சிறுபிள்ளை போல் நாடாளுமன்றத்தில் செயற்படுகிறார். முன்னாள் சபாநாயகர்களான பெல்பொல, சேர்லி கொரயா, பாக்கீர் மாக்கர், மொஹமட் மற்றும் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சபாநாயகர் நாடாளுமன்ற நிலையியல் கட்டளையை மீறுவதும், முறையற்ற வகையில் செயற்படுவதும் பாரதூரமான குற்றமாகும். சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபாநாயகர் பதவிக்கு தகைமையற்றவர். அவரிடம் நடுநிலைமை கிடையாது. நாடாளுமன்ற சுயாதீனத்தை அவர் இல்லாதொழித்துள்ளார். சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையை வெகுவிரைவில் சபைக்கு கொண்டு வருவோம் என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com





# நாட்டுக்கு நன்மையளிக்கும் வகையில் நாணய நிதியத்துடன் இணக்கம் தேவை

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

நாட்டுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை எட்டுவதற்கு இப்போதாவது ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏற்றுமதியாளர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு நுண் பொருளாதாரம், பேரண்ட பொருளாதாரம் குறித்து சிந்திப்பது போலவே, தனிநபர்கள், குடும்பங்கள், தொழில்முனைவோர் மற்றும் வியாபாரிகள் தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். இன்றும் கூட, நுண் பொருளாதாரத்தில் தனிநபர், சமூகம் மற்றும் குடும்ப அலகுகள் அழுத்தங்களைச் சந்தித்து வருகின்றன. ஆளும்தரப்பு ஏற்றுமதிக்கு உகந்த கொள்கையைப் பின்பற்றினால், சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடி ஒக்டோபர் 1 முதல் இலகுபடுத்த ப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை நீக்குவது ஏன் என்ற கேள்வி எழுகிறது. தேர்தலின் போது வாக்குறுதியளித்த பிரகாரம், புதிய சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தால் ஏற்றுமதிக்கு உகந்த பெறுமதி சேர் வரி தக்கவைக்கப்பட்டிருக்கலாம். என்றாலும் அது இன்று நீக்கப்படும் நிலையே காணப்படுகின்றது. விநியோகஸ்தர்களிடமிருந்து வரி அறவிடுவதற்குப் பதிலாக, பெறுமதி சேர் வரி இன்வாய்ஸ் வழங்கப்படுகிறது. ஏற்றுமதியாளர்கள் குறித்து கவலை இருந்தால்,நாணய நிதிய விதிமுறைகளின் பேரில் இவை ஏன் நீக்கப்படுகின்றன என்பதில் பிரச்சினை காணப்படுகின்றன.

இது ஏற்றுமதியாளர்களுக்கு பணப்புழக்க சிக்கலை உருவாக்குகின்றமை இதன் பாதக அம்சமாக காணப்படுகிறது. தாமதங்கள் நேரத்தை வீணடிக்கும், செயல்திறனைக் குறைக்கும், நிர்வாகச் செலவுகளை அதிகரிக்கும், ஏற்றுமதித் துறையில் போட்டியிட வாய்ப்புள்ள பிற நாடுகள் இந்தப் பிரச்சினையில் விரைந்து செயல்படும் நிலை எமக்கு பாதகமாக அமையும். நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களுக்குக் கூட மூலதனப் பிரச்சினைகளை இது உருவாக்கும்.

வரி இணக்கத்தையும் வரி அறவீட்டையும் அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நிபந்தனையை நாணய நிதியம் 2024 ஜூனில் விதித்துள்ளது. காலாண்டுக்கு ஒருமுறை பெற்றுத்தரும் 2.9 பில்லியனுக்கும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, நமது நாட்டில் ஏற்றுமதியாளர்கள் கடுமையான பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். இறுதி நேரத்திலேனும்நாணயநிதியத்துடன்கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும், டிஜிட்டல் மயமாக்கல் நிறைவுறும் வரையும் இதை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் நாட்டின் வங்குரோத்து நிலைகாரணமாக260,000தொழில்முனைவோர் சிரமத்திற்கு ஆளானார்கள். இப்போதாவது சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடாமல் செயல்படுமாறு நாம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம். அமைச்சரால் முன்வைக்கப்படும் நம்பிக்கையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒருபோதும் கபட அரசியலில் ஈடுபட மாட்டோம். இரண்டு காலாண்டுகளாக பொருளாதார வளர்ச்சி இலக்குகளை தாண்டியது மகிழ்ச்சி அளிக்கிறது. 2028 முதல் ஆண்டுதோறும் 5.5 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த ஆளும்தரப்பு தயார் நிலையிலா இருக்கிறது என நாம் கேள்வி எழுப்புகிறோம். முந்தைய ஆளும்தரப்பு இணக்கப்பாடு கண்ட நாணய நிதிய ஒப்பந்தத்தை அவ்வாறே பின்பற்றாமல் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தால், 2033 ஆம் ஆண்டிலிருந்தே கடனை திருப்பிச் செலுத்தும் நிலைக்கு வந்திருக்கலாம்.

நமது நாட்டில் சுமார் 50 சதவீதமானோர் பல்வேறு வகையான வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக பல நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. நுகர்வு, வருமானம், உற்பத்தி மற்றும் முதலீடு ஆகிய வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரில் வறுமை தொடர்பில் அரசுத் தலைவர் பேசியது நல்ல வியமாகும். என்றாலும், அஸ்வெசும மூலம் வறுமை ஒழிக்கப்படாது. அஸ்வெசும நுகர்வை மட்டுமே நோக்கமாகக் கொண்டதாகும். ஏற்றுமதி, உற்பத்தி அல்லது சேமிப்பு எதுவும் இதில் அடங்குவதில்லை. இது சிரமங்களை அனுபவிக்கும் மக்களுக்கு நுகர்வுக்கான நிதிசார் வசதியை பெற்றுக் கொடுப்பதற்காக மட்டுமே வழங்கப்பட்டு வருகிது. எனவே வறுமையை ஒழிப்பதற்கு நாட்டிற்கு ஒரு தெளிவான பயனுள்ள திட்டமொன்று அவசியமாகு என்றார்.

# நாடாளுமன்ற வாயிலில் உள்ள கழிப்பறையை மூடவேண்டாம்

## அருச்சுனா எம்.பி. உருக்கமான வேண்டுகோள்

நாடாளுமன்றத்தின் பிரதான வாயிலில் உள்ள பொது கழிப்பறையை மாலை 04.30 மணிக்கு பிறகு மூடவேண்டாம். இரவில் பூட்டு போட வேண்டாம் என்று குறிப்பிடுங்களௌன யாழ். மாவட்ட சுயேச்சைக்குழு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

அர்ச்சுனாவின் இந்த கருத்தை கேட்டு சபையில் இருந்தவர்கள் சத்தமாக சிரித்தார்கள். சபாநாயகரும் சிரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய அர்ச்சுனா நிலையியல் கட்டளை 141 பிரகாரம் இதனை குறிப்பிடுகிறேன். நாடாளுமன்றத்தின் பிரதான வாயிலில் உள்ள பொது கழிப்பறை மாலை 4.30மணிக்கு மூடப்படுவதாகவும், அதனால் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாகவும் பொலிஸார் குறிப்பிடுகிறார்கள். ஆகவே அந்தப் பொது கழிப்பறையை மூட வேண்டாம், இரவில் பூட்டு போட வேண்டாம் என்று குறிப்பிடுங்கள் என்றார்.

அர்ச்சுனாவின் இந்த கருத்தை கேட்டு சபையில் இருந்தவர்கள் அனைவரும் சத்தமாக சிரித்தார்கள். சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, அதற்கு ஏதும் பதிலளிக்காமல் சிரித்தவாறு சபை நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிப்புக்கான காரணங்கள் அனைத்துமே அடிப்படையற்றவை

## சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டு

பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் சபாநாயகரால்முன்வைக்கப்பட்ட அனைத்து காரணங்களும் அடிப்படையற்றதாகுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பின் போது, நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் வெளியிட்ட அறிவித்தல் தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்ற முற்பட்டபோது, அதற்கு சபாநாயகர் இடமளிக்காத நிலையில், நேற்று இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிகையிலேயே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:,

பிரதி அமைச்சர் ஒருவர் உத்தியோகபூர்வ பதவியைக் கொண்டிருப்பவராக இருப்பதால், அவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதில் எந்தவிதத் தடையும் இல்லை என்பதைக் குறிக்கும் வகையில் செயலாளர் அலுவலகம்அறிக்கைஒன்றைஅளித்துள்ளது. இதனால், நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஏற்க முடியாது என்று உறுதிப்படுத்திய அறிவிப்பு ஊடாக அந்த தர்க்கம் தகர்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், சட்ட மா அதிபர் தரப்பின் விளக்கத்தின்படி இதற்கு சட்ட ரீதியான எந்தத் தடையும் இல்லையென்பதும், ஏக்ஸின் மேவின் நாடாளுமன்ற சம்பிரதாயங்களின்படி ஒரு குழுவாக ஆளும்தரப்பிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானங்கள் கொண்டுவரப்படுவது போலவே தனிநபர், அமைச்சர்களுக்கும் எதிராக கொண்டு வர முடியும் என்பதனை அவர் வாசித்து பார்த்தாரா என்று தெரியவில்லை.

இந்தியாவில் அரசமைப்பு அதிகாரிகளுக்கு மட்டுமின்றி, பதவி வகிப்பவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மாணங்களை கொண்டு வர முடியும். அத்துடன் தற்போதைய ஆளும்தரப்பு தமக்குத் தேவையானபடி அனுரபண்டாரநாயக்கவின்சம்பிரதாயங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆனால் அனுர பண்டாரநாயக்கவினால் எதிர்க்கட்சித் தலைவர் எழும்போது அவருக்கு கருத்து தெரிவிக்க அனுமதித்தார்; ஆனால் இவர்கள் இன்று அவ்வாறு கருத்து தெரிவிக்க வாய்ப்பளிப்பதில்லை.

மேலும் எதிர்க்கட்சி பிரதமகொரடாவான கயந்த கருணாதிலக மற்றும் அஜித் பி. பெரேரா ஆகியோர் இதுதொடர்பாக தர்க்க ரீதியாக கருத்துக்களை தெரிவிக்கும் போது அவர்களை பார்த்து 'சிறுபிள்ளைத் தனமாக பேச வேண்டாம்' என்று கூறுகின்றனர். சிறுவர்களின் உரிமைகளைப் பற்றி பேசிய பின், இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் குழந்தைகள் போல பேச வேண்டாம் எனச் சொல்லி, அந்த உரிமையையே கிண்டல் செய்கின்றனர் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

உ

முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# என்கடன் பணி செய்து கிடப்பதே

பணி செய்தலின் மேன்மையை உணர்த்தும் அப்பர் பெருமானின் தேவார அடிகளே இன்றைய எங்கள் சிந்தனைக்குரிய பொருண்மையாகும் .

இங்கு 'கடன்' என்பது 'கடமைக்காக' செய்தல் ;வேண்டாவெறுப்புடன்செயற்படுதல்என்றபொருளில் சொல்லப்படவில்லை என்பதனை உணர்த்து வதே இச் சிந்தனையின் இலக்காகும் . உண்மையில் கடமைக்காக அன்றி கடமையாக உணர்ந்து செயற்படல் என்பதனையே அப்பர் பெருமானின் அருள் வார்த்தை குறித்து நிற்கின்றது .மன ஈடுபாட்டுடன் ஆர்வமாக, அர்ப்ப ணிப்புடன் நாம் ஆற்றும் பணிகள் யாவுமே ஆன்மீக பணிகளாய் எமக்கும் பிறருக்கும் நன்மை தருகின்றன. அத்தகைய பணிகளினால் கிடைக்கின்ற மன நிறைவும் ஆனந்தமும் எல்லையில்லாதன.

நம் கடம்பனை பெற்றவள் பங்கினன்
தென் கடம்பை திருக்கர கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்



என் கடன் பணி செய்து கிடப்பதே

என்ற அழகான தேவாரத்தின் மூலம் அடியவர்களைத் தாங்குவது இறைவன் கடன்

என்று குறிப்பிடும் அப்பர் பெருமான் இ அடியவர்களின் கடன் என்பது எப்பொழுதும்

பலன் என்ற எதிர்பார்ப்பு இல்லாமல் தொண்டு புரிவது என தெளிவுபடுத்துகின்றார்.

இங்கே பணி என்பது எத்தகைய ஆரவாரமும் இல்லாமல் செய்யப்படும்

ஒன்றாகின்றது, 'நான் செய்கின்றேன்; நான் உதவுகின்றேன்' என்ற ஆணவ முனைப்பு

ஏதுமில்லாமல் செய்யப்படுவதனாலேயே பணி உயர்வானதாகின்றது. பற்றில்லாமல்

செய்யப்படும் உயர்ந்த சமுதாய பணி யை ஆற்றுவதனால் தான் இறைவனும் எங்களைத் தாங்குகின்றான்.

– கலாநிதி கௌரி சண்முகலிங்கன்

உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# வெளிநாடு சென்று மக்கள் உரிமை பற்றி பேச முன்னர் உள்நாட்டு மக்களின் வாழ்வுரிமையை காக்கட்டும் அநுர

## மக்கள் போராட்ட அமைப்பின் பிரதிநிதி வீரசிங்கம் காட்டம்

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தை ஆய்வறிக்கைக்கமைய முன்னெடுப்பதாகக் கூறிய அரசுத் தலைவர் அநுரகுமார தற்போது அதனை உடனடியாக ஆரம்பிகுமாறுவலுசக்தி அமைச்சிற்கு பணிப்புரைவிடுத்துள்ளார். வெளிநாடுகளுக்குச் சென்று மக்களின் உரிமைகள் தொடர்பில் பேசும் அரசுத் தலைவர் அநுரகுமார முதலில் உள்நாட்டு மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்க வேண்டும் என மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வீரசிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மணல் திட்டுக்களால் ஆன மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் தீவில் காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. இங்கு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமெனில் குறித்த தீர்வு தொடர்பில் ஆழமாக ஆராய்ந்தே அவற்றை முன்னெடுக்க வேண்டும். அந்த வகையிலேயே மக்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட இந்த திட்டம் கைவிடப்பட்டது.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதனைச் சூழ பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. சூழல் பிரச்சினைகள் மாத்திரமின்றி மக்களுக்கு சுகாதார பாதிப்புக்களும் ஏற்பட்டன. இதனால் அங்கு வாழும் மக்கள் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அழைத்த அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாகக் குறிப்பிட்டார்.

இதற்கு 30 நாட்கள் கால அவகாசமும் கோரப்பட்டது. அதற்கமைய ஆராய்ந்து தீர்வுகளை வழங்குவதாகவும் வாக்குறுதியளிக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் கடந்த 19ஆம் திகதி அரசுத்தலைவர் செயலகவளாகத்தில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது மன்னார் மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசுத் தலைவர் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு தமக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஆய்வறிக்கையை ஆராய்ந்து ஒரு வாரத்துக்குள் தீர்வு வழங்குவதாகக் கூறப்பட்டது.

ஆனால் வழங்கப்பட்ட இந்த வாக்குறுதிகள் அனைத்தையும் மறந்து அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த 22ஆம் திகதி வலுசக்தி அமைச்சிற்கு உடனடியாக இந்த திட்டத்தை ஆரம்பிக்குமாறு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக பொது வெளிகளில் வாக்குறுதியளிக்கும் அரசுத் தலைவர் உள்நாட்டுக்கும் இவ்வாறு அராஜகமாக செயற்படுவதை அனுமதிக்க முடியாது. எனவே துரிதமாக இந்த வேலைத்திட்டத்தை நிறுத்தி மன்னார் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# 'ஐஸ்' போதைப் பொருள் பற்றி சஜித் ஒரு கேள்விகூடக் கேட்காதது ஏன்?

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க குத்திக்காட்டு

நாடாளுமன்ற அமர்வில் நிலையியற் கட்டளையின் கீழ் தினசரி கேள்விகளை கேட்டு சபாநாயகரிடம் முரண்படும் எதிர்க்கட்சித் தலைவர் தெற்கில் கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் பற்றி ஒரு கேள்வி கூட கேட்கவில்லை. இது சந்தேகத்துக்குரியது. பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளரான மனம்பேரி என்பவரே இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். வெகுவிரைவில் பல விடயங்கள் வெளிவருமென சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மீதான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தின் நிலையியல் கட்டளை 27/ 2கீழ் கேள்விகளை கேட்டு சபாநாயகருடன் சண்டையிடும் எதிர்க்கட்சித் தலைவர் அண்மைகாலமாக கைப்பற்றப்படும் போதைப்பொருள் தொடர்பில் எந்த கேள்விகளையும் கேட்கவில்லை.இது சந்தேகத்துக்குரியதே,

தங்காலை பகுதியில் கைப்பற்றப்படும் போதைப்பொருள் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பிரதான அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்பு செயலாளரான மனம்பேரி என்பவரே இந்த போதைப்பொருள் விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆளும்தரப்பின் செயற்பாடு பற்றி நாங்கள் சபையில் இல்லாத சந்தர்ப்பத்தில் குற்றஞ்சாட்டி விட்டு, நாங்கள் சபைக்கு வருவதற்கு முன்னர் சென்று விடுகிறார்.போதைப்பொருள் விவகாரம் குறித்து தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது. வெகுவிரைவில் உண்மை வெளிவரும்.

ஊடக சந்திப்புக்கள் மற்றும் கண்காட்சிகளை நடத்திக் கொண்டு அரசாங்கத்தை நிர்வகிக்கவில்லை.அவ்வாறான மனநிலையும் எமக்கு இல்லை. ஆளும்தரப்பு ஏதும் செய்யவில்லை என்று எதிர்க்கட்சியினர் மாத்திரமே குறிப்பிட்டுக்கொள்கிறார்கள்.

மக்கள் அவ்வாறு குறிப்பிடவில்லை. ஊடகங்களா இந்தோனேசியாவுக்கு சென்று பிரதான பாதாளக்குழுக்களை கைது செய்தது, ஊடகங்களா? தங்காலை பகுதியில் ஐஸ் போதைப்பொருட்களை கண்டுப்பிடித்தது.ஊடகங்களா, ஊடக சந்திப்பு மற்றும் கண்காட்சியை நடத்த வேண்டிய அவசியம் எமக்கில்லை.

ஐந்து வருட பதவி காலத்துடனே அரசாங்கத்தை பொறுப்பேற்றுள்ளோம். மக்களுக்கு வழங்கிய கொள்கை பிரகடனத்தை நாங்களே தயாரித்தோம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நாங்கள் நன்கு அறிவோம். எதிர்க்கட்சியினர் எமக்கு நினைவூட்ட வேண்டிய அவசியமில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம் என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2025இல் வெளியிடப்பெற்றது